முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

**மகான் வரரிஷி அருளிய ஒளி சூட்சும நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

01.11.2018, வியாழக்கிழமை

1. **காக்கும் ஞான சக்தியாகவே**
**கருணை வடிவாக வந்த அரங்கா**
**தேக்கமிலா அன்னதானமதை**
**தொடர்ந்து செய்து மக்களுக்கு**
2. மக்களுக்கு மாதவசியாக அருளி
மரணம் வெல்லும் வழி காட்டும்
ஆக்கம் கொண்ட ஞானியே
அரங்கனே உன் பெருமை கூறி
3. கூறியே ஒளி சூட்சும நூலை
குவலயத்தில் **விளம்பி துலை திங்கள்**
**தெரியவே மூவை திகதி குருவாரம்**
**(விளம்பி வருடம் ஐப்பசி மாதம் 15ம் நாள் 01.11.2018, வியாழக்கிழமை)**
**தேசிகனுக்கு வரரிஷி யானும்**
4. யானும் உலக நலமுற உரைப்பேன்
உயர் ஞானம் அருளி காக்கும்
ஞான தேசிகன் ஞானவழி
நன்மை செய்யும் வழியாக இருக்க
5. இருக்கவே முருகா அரங்கா என
இயம்பி உலக மக்களெல்லாம்
கருத்தாக வணங்கி வருகவே
கலியுகத்தில் குருவருள் துணைபட
6. துணைபட அன்னதான சேவையை
தொடர்ந்து செய்து வருக
துணைபட உலக மக்களுக்கு
தெய்வீகம் பரவி நின்று
7. நின்றுமே ஆறுமுகன் ஆளுமை
நிலவுலகில் பெருகி நன்கு
நன்றான ஞானயுகம் ஆகும்
ஞானிகள் ஆட்சியாக மாறும்
8. மாறுதலை செய்து நன்கு
மக்களை காக்கும் சத்தியாய்
ஆறுமுகனே அவதாரம் நிகழ்த்திட
அரங்கனை ஏற்ற மக்களுக்கு

9. மக்களுக்கு சத்ரு ருண ரோகம்
மாச்சர்யம் ஏவல் ஒமல் எல்லாம்
தக்கதொரு அணுகா வாழ்வு
தவபலம் பெருகி நின்று
10. நின்றுமே மக்களிடை தருமம்
நிலைத்துமே சகல வளம் காணும்
நன்றான சேவை நோக்கில்
ஞானவான்கள் பதவிக்கு வந்து
11. வந்துமே கலியுகம் தேறும்
வந்துமே முருகன் ஆளும்
சிந்தைமிகு ஞான யுகமாகும்
செப்பிய ஒளி சூட்சும நூல் முற்றே.

–சுபம்–

**முருகப்பெருமான் துணை**

**மகான் வரரிஷி அருளிய ஒளி சூட்சும நூலின் சாரம் :**

இவ்வுலகை காக்கின்ற ஞானசக்தியாகவே கருணையே வடிவமாக வந்துதித்த ஆறுமுக அரங்கமகா தேசிகனே தடையற்ற அன்னதானத்தினை தொடர்ந்து தளராமல் செய்து மக்களுக்கு அருள் செய்து மாதவசியாக விளங்கி மரணம் வெல்லுகின்ற மரணமிலாப் பெருவாழ்வை அடையும் வழிமுறைகளை அருளி வழிகாட்டும் எல்லையில்லா ஆற்றல் பெற்றிட்ட மகா ஞானியே அரங்கமகா தேசிகனே அற்புதமான உமது பெருமைகளை உலகறியக் கூறியே உலக நலம் கருதி **விளம்பி வருடம் ஐப்பசி மாதம் 15ம் நாள் 01.11.2018, வியாழக்கிழமையான** இன்றைய தினமதனிலே ஒளி சூட்சும நூல்தனையே வரரிஷி யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் வரரிஷி.

உயர்வான உண்மை ஞானம்தனை மக்களுக்கு அருளி மக்களைக் காக்கின்ற ஞானதேசிகன் அரங்கமகாதேசிகன் கூறுகின்ற ஞானவழி, நன்மைகள் பல செய்யும் அற்புதமான வழியாக இருக்கின்றது. ஆதலினால் மக்களே நீங்கள் “முருகா அரங்கா” என்றே கூறி கருத்துடன் பயபக்தியுடன் அரங்கமகா ஞானியை வணங்கி அரங்கமகா தேசிக ஞானகுருவின் துணையுடன் அன்னதானப் பணிகளை தொடர்ந்து செய்து வர வேண்டும்.

அன்னதான சேவைகளை உலக மக்களுக்கு தொடர்ந்து செய்து வரவர, உலக மக்களிடத்து தொடர்ந்து செய்து வரவர, உலக மக்களிடத்து தெய்வீகம் பரவி நின்று முருகப்பெருமானின் ஆட்சி இவ்வுலகினில் பெருகி இவ்வுலகம் நன்மைகள் மிக்க ஞானஉலகமாக மாறிடும். இவ்வுலகம் ஞானிகள் ஆளும் ஞான ஆட்சியாக மாறிடும்.

அற்புதமான மாறுதல்களை செய்து மக்களைக் காக்கின்ற சக்தியாக முருகப்பெருமானே அவதாரமாக ஆறுமுக அரங்கமகா தேசிகனாக அவதாரம் நிகழ்த்தி இருக்க, ஆறுமுக அரங்கமகா தேசிகனாரை குருவாய் ஏற்றுக் கொண்ட மக்களுக்கு எதிரிகளால் இடையூறு வராது, கடன் தொல்லைகள் இருக்காது, பேதங்கள் வாராது, ஏவல் ஒமல் எல்லாம் விலகிடும், பொறாமையினால் பிறர் செய்யும் தீயசெயல்களின் பாதிப்புகள் எல்லாம் வாராமல் காக்கப்படுவர், தவபலம் அவர்களுக்கு பெருகி நின்று காக்கும்.

உலகினில் மக்களிடையே தர்மசிந்தை அதிகமாகி தர்மங்கள் அதிகம் செய்து உலகின் தர்மபலம் பெருகி உலகமே சகல வளம் காணும், நன்மைமிக்க சேவை மனப்பான்மையுடன் ஞானவான்கள் எல்லாம் பதவிக்கு வந்து இந்த கலியுகம் தேற்றம் அடையும்.

கலியுகம் ஞானவான்கள் துணையுடன் முருகப்பெருமான் ஆளும் அறிவே வடிவான ஞானயுகமாக மாறிடும் என உலகிற்கு தமது ஒளி சூட்சும நூல் மூலம் கூறுகிறார் மகான் வரரிஷி.

–சுபம்–